# செபமாலையே ஜெயம்



### ஆசிரியர் குழு


அருட்தந்தை. *RDE.* **ஜெரோம்**
திருத்தல பேராலய அதிபர்

அருட்தந்தை. **ஆரோக்கியராஜ் ஸ்டீபன்**
திருத்தல பேராலய பங்குதந்தை

அருட்தந்தை. **டேவிட் அலெக்ஸாண்டர்**
திருத்தல பேராலய உதவி பங்குதந்தை

அருட்சகோ. **சவரிமுத்து** (BSM)

அருட்சகோ. **ஜோசப் சார்த்தோ** (BSM)


## பிப்ரவரி மாத சிறப்பு இதழ்


**மாலை 6** **மணி 5**


குறிப்பு : மாத இதழுக்கு
நன்கொடை கொடுக்க விரும்புவோர்,
இந்த இதழில் விளம்பரம் செய்ய விரும்புவோர்
கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


**திருத்தல பேராலய அதிபர்**
*புனித செபமாலை அன்னை பசிலிக்கா*
*கருமத்தம்பட்டி, கோவை - 641 659.*
*தொலைபேசி எண் : 0421 2332476*


## உள்ளே.......


1. ஆசிரியர் பக்கம் - 2
2. பழமொழிகளும், கிறிஸ்தவ... - 3
3. பசிலிக்கா செய்திகள் - 4
4. வெறும் வார்த்தையில்லை... - 5
5. காட்சிகள் வழியாக பேசும் மரியாள் - 6
6. தங்க இதயத்தின் அன்னை - 7
7. மனிதநேயமா ? நம்பிக்கையா ? - 9
8. தொலைத் தொடர்பும், தொலைந்த... - 11
9. அன்பில் கனியும் வாழ்த்து - 13
10. சாட்சிகள் - 15
11. வேதாகமப் பெண்கள்சாட்சிகள் - 17
12. ஒரு உறவு அழைக்குது - 18
13. தொடர்பா ! அல்லது இணைப்பா ! - 21
14. விவிலிய வினா-விடை 24




# ஆசிரியர் பக்கம்



*கிறிஸ்துவில் அன்பிற்கினிய வாசகர்களே !*

*இப்புதிய ஆண்டின் தொடக்க நாட்களிலே நமது தமிழக திருச்சபை புதிய முன்னெடுப்புகளோடு வரும் நாட்களை சந்திக்க தயார்ராகின்றது. திருச்சபை இவ்வாண்டை* **இளையோர் ஆண்டாக** *கொண்டாட அழைப்பு விடுத்திருக்கின்றது. திருச்சபையாகிய நாம் இவ்வாண்டை இளையோர் ஆண்டாக சிறப்பிக்க பல காரணங்கள் உண்டு. நாம் வாழும் இந்த சூழ்நிலையில் சமூகம், பொருளாதாரம், தனி மனித சுதந்திரம் என்று எல்லாம் மாறி வருகின்ற வேலையில் ஒவ்வொருவரின் மனப்பாங்கும் மாறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இளையோரின் மனப்பாங்கு வெகுவாக பல கலாச்சாரத்தைத் தாண்டிய தீமைகளுக்கும், இலட்சியங்களில் தெளிவு அற்ற எண்ணங்களுக்கும், உணர்வுகள் சார்ந்த எண்ணங்களுக்கும் அடிமைப்பட்டிருக்கின்றார்கள். எனவே, இவ்விளைஞர் ஆண்டு தமிழக திருச்சபையில் ஒரு சில தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்நோக்கி நாம் ஜெபிப்போம். திருத்தந்தை இளைஞர்களை முன்னிட்டு வழங்கிய* **கிறிஸ்து வாழ்கிறார்** *என்னும் திருத்தூது ஊக்கவுரை எண் 3 -ல் இவ்வாறு குறிப்பிடுகிறார். நாம் அனைவருமே இளைஞர்களைப் பற்றியும், இளைஞர்களுக்காகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. பல வேளைகளில் நம் பங்குகளில் இளைஞர்களுக்குப் போதிய முக்கியத்துவமும், அவர்களின் நிலையையும் அறிய முக்கியத்துவம் தரப்படுவதில்லை என்பது தான் உண்மை. திருத்தந்தை கூறுவதுபோல இளைஞர்களுக்கு கவனமுடன் நாம் செவிகொடுப்பதற்கு மாறாக, ஏற்கெனவே முன்தயாரிக்கப்பட்ட பதில்களையும், உடனடியானத் தீர்வுகளையும் வழங்கும் மனப்போக்கே நம்மிடம் இருக்கின்றது. இளைஞர்களைப் பற்றிய நம்முடைய முன்சார்பு எண்ணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுக்கு நாம் கவனமுடன் செவிசாய்த்தால் இளைஞர்கள் வாழ்வு மாற்றம் பெறும். இன்றைய நமது தாய் திருநாட்டில் ஏற்படும் அடக்குமுறைகள், அநியாய தீர்மானங்கள், ஒரு தலை சார்பு தீர்ப்புகள் என்று எல்லாவற்றிற்கும் ஒருமித்த குரலொளித்தது இளைஞர்களிடத்திலிருந்துதான். அவர்களிடம் இருக்கும் எழுச்சிக்கு காரணம், தங்களிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற எண்ணமும் வரும் சந்ததியருக்கு எதை விட்டுச் செல்ல வேண்டும் என்ற பொறுப்புணர்வும், தங்களை அநியாயமாக ஒடுக்குகிற அட்டுமுறைகளுக்கு பணிந்து போகாத சுதந்திர எண்ணமும், தம் சகோதர சகோதரிகளைக் காக்க வேண்டும் நண்பர்களுக்காக உயிரை கூட தர முடியும் என்ற உத்வேகமும் தான். அவர்களால் தாய் திருஅவையும் சமூகமும் மாற்றம் பெறும் என்னும் நம்பிக்கை அவர் வெளிப்படுத்துகின்றார்கள். ஆகவே திருத்தந்தையின் இந்த அழைப்பை ஏற்று இந்த ஆண்டில் அனைத்து மறைமாவட்டங்களிலும் பங்கு தளங்களிலும் பணிக்குழுக்களிலும் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் தருகின்ற திட்டங்களை செயல்படுத்துவோம். நம் குடும்பங்களில் குறிப்பாக பெற்றோர்கள் இந்த இளைஞர் ஆண்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து இவ்வாண்டை சிறப்புரச் செய்ய இளையோருக்கு பல வாய்ப்புகளைத் தர மணம் திரக்க வேண்டும்.*

இளைஞரே, ஆற்றலோடு மாற்றம் நோக்கி
இளைஞர் ஆண்டு 2020

*இளைஞரான இயேசு நம் இளைஞர்களை வழிநடத்துவாராக ! நாம் அவருக்கு உறுதுணையாக இருப்போமாக !*

# பழமொழிகளும், கிறிஸ்தவ வாழ்வியலும்

- அருட்தந்தை. **ஜான் ஜோசப்**

**சோற்றில் இருக்கும் கல்லை எடுத்தெறியப்படாதவன், வாழ்வில் எப்படி முன்னேறுவான்**

*மத்தேயு 25:14-30 நெடும் பயணம் செல்ல இருந்த ஒருவர் தன் பணியாளர் மூவரை அழைத்து முதல்வனுக்கு 5 தாலந்தும், 2 வது வேலைக்காரனுக்கு 2 தாலந்தும், மூன்றாவது வேலைக்காரனுக்கு 1 தாலந்தும் கொடுக்கிறார். இதை வைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். கணக்கு கேட்பேன் என்று சொல்லி பயணத்தைத் தொடங்கினார். அநேக நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்த மூவரிடமும் கணக்கு கேட்கிறார். 5 தாலந்து பெற்றவன் வியாபாரத்தில் முடக்கி, இரவும் பகலும் பாடுபட்டு மேலும் மேலும் 5 தாலந்து சம்பாதித்தான். 2 தாலந்து பெற்றவனும் இரவும் பகலும் பாடுபட்டு 2 தாலந்து சம்பாதித்தான். ஒரு தாலந்து பெற்றவன் சோம்பேறி. கைக்குட்டையில் கட்டி வீட்டில் குழி தோண்டி புதைத்து வைத்தான். நெடுங்காலத்துப்பின் பயணம் சென்றவன் திரும்பி வந்தான். மூவரையும் கூப்பிட்டு கணக்கு கேட்டார். 5 தாலந்து வாங்கி சம்பாதித்த வேறு 5 தாலந்தையும் கொண்டுவந்து 10 தாலந்து கொடுத்தான். 2 தாலந்து கொடுத்தவனும் தன்னுடைய திறமைக்கு ஏற்ப சம்பாதித்து 4 தாலந்து கொடுத்தான். ஒரு தாலந்து பெற்றவன் கொடுத்தவர் பேரிலே குற்றம் கண்டு பிடிக்கிறான். வைத்த இடத்தில் தேடுபவர். தூவாத இடத்தில் விளைப்பவர். உமக்கு அஞ்சி ஒரு தாலந்தை புதைத்து வைத்தேன். இதோ உம்முடையது என்று வாங்கியதை அப்படியே கொடுத்தான். கொடுத்தவருக்கு கோபம். எனக்கு அஞ்சி இந்த தாலத்தை வட்டிக்காரரிடம் கொடுத்திருக்கலாம். இப்பொழுது வட்டியாவது வாங்கியிருப்பேன் என்று சொல்லி ஒரு தாலந்து எடுத்து 10 தாலந்து சம்பாதித்தவனிடம் கொடுப்பதை பார்க்கிறோம். இருப்பவனுக்கு கொடுக்கப்படும், இல்லாதவனிடமிருந்து இருப்பதும் எடுக்கப்படும்.*

**அகல இருந்தால் நிறைந்த உறவு, கிட்ட இருந்தால் முட்டப்பகை**

*ஒரு குடியானவருக்கு 3 பையன்கள். மூன்றுபேருக்கும் திருமணம் முடிந்தது. மூன்று பேருக்கும் ஒரு ஊரில் சிறிது துரத்தில் வேறு வேறு வீடு கட்டிக் கொடுத்தார். நண்பர் ஒருவர் அவரைப் பார்த்து மூன்று பேருக்கும் பக்கத்திலேயே வீடு கட்டிக் கொடுத்தால் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பார்கள் என்றார். அப்பொழுது குடியானவர் இந்த பழமொழியைச் சொன்னார். அதுதான் இன்றையநிலை. அது தான் உண்மை.*

*என் தாத்தாவுக்கு 4 ஆண் மக்கள். என் தகப்பனார் கடைசி மகன். பெரியப்பாவுக்கு வீடு கட்ட இடம் ஒதுக்கப்பட்டது. 2 வது பெரியப்பாவுக்கு வீடு, 3 வது பெரியப்பாவுக்கு வீடு, எங்கள் வீட்டிற்கு தொட்டு இருந்தது. 2 வது பெரியம்மாவுக்கும், 3 வது பெரியம்மாவுக்கும் விறகு சண்டை. 2 வது பெரியம்மா நான் உன் விறகை எடுக்கவில்லை. குழந்தையைப் போட்டுத் தாண்டினார்கள். குழந்தை பிழைத்துக் கொண்டது. பெரியம்மா இறந்து விட்டார்கள். கிட்ட இருந்ததால் தீரா த, பேசாத பகைமை. மாத்திரம் அல்ல. உடலுக்கே ஆபத்து.*

**அப்பன் அருமை, அவர் மாண்டால் தான் தெரியும்**

*என் தாத்தா பழைய பைபிள் வைத்திருந்தார். அது தலையணை போல் பெரியதாக இருந்தது. பாகம் பிரிவினையில் கை எழுத்து போடத் தெரியாத என் தகப்பனார் 10 ரூபாய் கொடுத்து அதை வாங்கினார். அத்தோடு காகிதம் தனித்தனியாக வருகிறது என்று பைண்டிங் செய்ய சோமனூரில் இரயில் ஏறினார். திருப்பூரில் இரயில் பெட்டியிலிருந்து இறங்கினார். பைபிள் எடுக்க மறந்துவிட்டார். சிறிது நேரத்திற்கு பிறகு திரும்பி வந்து பார்த்தபோது சாமான்கள் வைக்கும் இடத்தில் இருந்த பைபிளை யாரோ எடுத்துச் சென்று விட்டார்கள். எழுதப் படிக்கத்தெரியாதவருக்கும் பைபிள் மீது ஆர்வம். மக்கள் படிக்க வேண்டும் என்ற ஆர்வம். இப்பொழுது ஞாயிறு திருப்பலியில் என்ன நற்செய்தி வாசிக்கப்பட்டது என்று கேட்டால் நம்மில் அநேகருக்குத் ஒன்றும் தெரிவதில்லை.*

# பசிலிக்கா செய்திகள்



- ✍ 4.1.2020 முதல் சனி உபவாச ஜெபக்கூட்டத்தை அருட்பணி. ரபேல் கூத்தூர் (வி.சி.) அவர்களால் நடத்தப்பட்டது.இ தில்1 000பே பர்ப ங்குபெற்ற இறையாசீர் பெற்றுச் சென்றனர்.

- ✍ 5.1.2020 அன்று மூன்று அரசர் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று மதியம் 3 மணிமுதல் இரவு 8.30 மணிவரை சிறுவர் சிறுமியருக்கு விளையாட்டுப் போட்டிகளும், பெரியவர்களுக்கு லக்கி கார்னர் போன்ற விளையாட்டுகளும் நடத்தப்பட்டது. 23 அன்பியங்கள் சார்பாக பொங்கல் வைத்து இறைவனுக்கு நன்றி செலுத்தப்பட்டது. முடிவில் வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

- ✍ வருகின்ற 1.2.2020 ம் தேதி அன்று வழக்கம்போல் உபவாச செபக்கூட்டம் நடைபெற இருக்கிறது. அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு அன்னையின் ஆசிரை பெற உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- ✍ 2020 ஆம் ஆண்டிற்கான காலண்டர்கள் அங்காடியில் விற்பனைக்கு உள்ளது.

- ✍ புதுப்பிக்காத சந்தாதாரர் கவனத்திற்கு சந்தா புதுப்பிக்காதோர் கூடிய விரைவில் புதுபித்துக் கொள்ளவும்.

- ✍ ஜெபமாலையே ஜெயம் என்ற மாத இதழுக்கு நன்கொடை தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

- ✍ மாத இதழ் பற்றிய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. தொலைபேசி எண் : 0421 2332476

- ✍ ஒவ்வொரு மாதமும் 2-வது ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு மாதா தொலைக்காட்சியில் அருள்தலத்தின் திருப்பலி ஒளிபரப்பப்படுகிறது. திருப்பலி கருத்துக்காக ரூ. 500/- நன்கொடையாக கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் பெயர் மாதா தொலைக்காட்சியில் திருப்பலிக்கு முன் மற்றும் பின் ஒளிபரப்பப்படும்.

# வெறும் வார்த்தையில்லை மாறாக ஒரு வரலாறு

- அருட்தந்தை ஆல்பர்ட் செல்வராஜ், அ

அன்பிற்கினியவர்களே! மற்றவர்கள் என்னை புரிந்துகொள்ளவில்லை, என்று பலர் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறோம். ஏன், நாமே கூட அப்படி இருந்திருக்கலாம். கொஞ்சம் மாற்றி யோசிப்போமே! ஏன் மற்றவர்களின் தவறான புரிதலுக்கு, நாமே கூட காரணமாக இருக்க வாய்ப்பு உண்டு அல்லவா? அன்னை மரியாளின் வாழ்க்கையை சற்று அலசி பார்த்தால், மேலே கேட்ட கேள்விக்கு பதில் கிடைக்கும்.

அன்னை மரியாள் கடவுளின் திருமகனை பெற்று எடுக்க, கருவிலேயே பாதுகாக்கப் பெற்றவள். ஜென்ம பாவமின்றி பிறந்தவள். அதற்கும் மேலாக கிறிஸ்துவை தன் கருவினில் சுமந்தவள். இப்படி இருக்க , திருச்சபை பிப்ரவரி 2 ம் நாளிலே, அன்னை மரியாளின் சுத்திகரிப்பு அதாவது அன்னை மரியாளின் தூய்மை திருநாளை கொண்டாடுகிறது. அப்படியெனில், அன்னை மரியாள் தூய்மையற்றவளா? நிச்சயம் இல்லை. வாருங்கள்! இன்னும் சற்று ஆழமாக சிந்திப்போம்..

யூதர்களுக்கு, மோசே கொடுத்த கடவுளின் சட்டம், பிரசவத்திற்குப் பிறகு, ஒரு பெண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தூய்மையற்றவளாக கருதப்படுகிறாள். பின், கடவுளுக்குப் காணிக்கை கொண்டு வந்து, பலியிட்ட பின்பு, அந்தப் பெண் தூய்மையானவளாக கருதப்படுத்தப்படுவார்.

நம்முடைய தாய் மரியாள் ஆசீர்வதிக்கப்பட்ட தாய், அவர் இச்சட்டத்தின் கீழ் வர வேண்டிய அவசியம் இல்லை என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை; பிறகு எதற்காக அவள் இந்த தூய்மை சடங்கை நிறைவேற்ற வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது. காரணம், அன்னையின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையையும், அவரது அற்புதமான கருத்தரித்தலையும், கிறிஸ்துவை யார் என்றும் அச்சமூகம் அறியாததால், அச்சட்டத்திற்கு ஏற்ப, யூத வழக்கத்திற்கு ஏற்ப, அவள் தன் கடமையை நிறைவேற்றுகிறாள். கடவுளின் தாய் என்ற பெருமைக்குரிய நிலையில் இருந்தாலும், அன்னை, தன் கடமையை நிறைவேற்ற, மற்றவருக்கு முன்னுதாரணமாக இருக்க தவறியதில்லை. ருவேளைை தன்னை கடவுளின் தாய் என்று சொல்லிக்கொண்டு, இச்சட்டத்துக்கு இடம் கொடாமல் இருந்திருந்தால் கடமையிலிருந்து தவறியிருந்தால், நிச்சயம், அன்னை மரியாள் தவறுதலாக அச்சமூகத்தால் புரிந்து கொள்ளப்பட்டு, தண்டிக்கப்பட்டிருக்ககூடும். மேலும், அந்த சமூகமும் பெரும் பாவத்திற்கு ஆளாகியிருக்ககூடும். எனவே, அன்னையின் செயல் நமக்கு கூறும் செய்தி என்னவெனில், நாம் எப்படிப்பட்டவர்கள் என்பது நமக்கு தெரியும். ஆனால் மற்றவர்களுக்கு? எனவே, காலமும், நமது வாழ்க்கை முறையும் மற்றவர்களுக்கு நாம் யார் என்பதை தெளிவுபடுத்தும். அதற்கு முன்பாகவே எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற நிலை வந்தால் , நிச்சயம் நாம் தவறுதலாக புரிந்துகொள்ளப்பட வாய்ப்புள்ளது. அப்போது, நம் குறிக்கோளும் தடைபடக்கூடும். பிறரும் பாவத்தில் விழ நாம் காரணமாகக்கூடும் . எனவே, எந்த நிலையில் இருந்தாலும், அன்னையை போல, அனுதினமும் நம் கடமைகளை செய்வோம், காலம் ஒரு நாள் நம்மை யார் என இவ்வுலகம் கண்டுகொள்ளச் செய்யும். வாழ்க மரி! நம்மில் தொடரட்டும் அவள் வரலாறு!

# காட்சிகள் வழியாக பேசும் மரியாள்

- அருட்தந்தை. ஆன்டணி பெலிக்ஸ்

மரியன்னைப் பற்றி நாம் என்னும் போது நம் நினைவுக்கு வருவது அவருடைய காட்சிகள் தான். உலகின் பல்வேறு இடங்களில் மரியாள் காட்சி தந்து பல செய்திகளை மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அப்படி காட்சி கொடுத்த ஒரு இடம் தான் பிரான்ஸ் நகரில் உள்ள லூர்ட்ஸ். இந்த இடத்தில் 1858 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் பெர்னதெத் என்ற இளம் பெண்ணுக்கு மரியாள் காட்சி தந்தார்.

மரியாளின் காட்சி :

பெர்னதெத் 1844 -ம் ஆண்டு பிரான்சின் லூர்து நகரில் பிறந்தவர். தனது 13 வது வயதில் தூய நற்கருணை அருட்சாதனத்தைப் பெறத் தன்னையே தயாரித்துக் கொண்டிருந்தார். வறுமையான குடும்பத்தில் பிறந்த பெர்னதெத் தன் தோழர்களோடு அருகில் இருந்த காட்டுக்கு விறகுகள் சேகரிக்கச் செல்வார். அப்படி ஒரு நாள் அதாவது 1858 -ம் ஆண்டுபெப்ருவரி 11 -ம் நாளன்று சேகரிக்கச் சென்ற போது மரியாள் பெர்னதெத்துக்கு காட்சியளித்தார். அன்று தன்னுடைய இரண்டு தோழர்களோடு தன் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு நதிக்கரையோரம் விறகு சேகரிக்கச் சென்றார். அவருடைய இரு தோழர்களும் விரைவாக முன்னே சென்றுவிட, இவர் மெதுவாக இறங்கி அந்த ஆற்றைக் கடக்க முயற்சி செய்த போது வித்தியாசமாக காற்றடிக்கவும் இலைகள் காற்றிலே பறக்கும் சப்தமும் உண்டானது. அப்பொழுது அவர் ஆற்றங்கரையில் அமைந்திருந்த ஒரு குகையை நோக்கிப் பார்த்தார். அப்பொழுது அந்த குகையிலிருந்து தங்க நிற ஒளி வரவே அங்கு மிக அழகான, தூய்மையான வெண்ணிற நீள ஆடையும்நீல நிற இடைக்கச்சையும், தலையை மறைக்கும் ஒரு மெல்லிய துணியும், கையில் ஒரு ஜெபமாலையும் கொண்டிருந்த பெண் ஒருவர் தோன்றினார். அவருடைய பாதங்களின் கீழ் ரோஜாப் பூக்கள் நிறைந்திருந்தன. அந்த அழகிய பெண் பெர்னதெத்தைப் பார்த்து புன்னகை செய்தார். பிறகு ஜெபமாலை ஜெபிக்க சொல்லவே பெர்னதெத்தும் ஜெபித்தார். ஜெபமாலை முடித்து கண்களை உயர்த்திப் பார்க்கும் போது அந்த அழகிய பெண் மறைந்துவிட்டார். அவருடைய தோழர்கள் திரும்பி வந்தவுடன் நிகழ்ந்தவற்றை அவர்களுக்கும் விளக்கினார். ஆனால் அவர்கள் அவற்றை நம்பவில்லை.

மீண்டும் அடுத்த ஞாயிறன்று பெர்னதெத் அந்த குகைக்கு செல்லத் தூண்டப் பெறவே மீண்டும் அன்று அந்த அழகிய பெண் காட்சியளித்தார. மூன்றாம் முறையாக பெர்னதெத் அந்த குகைக்கு சென்ற போது அந்த அழகிய பெண் பெர்னதெத்தோடு பேசினார். அப்பொழுது தொடர்ந்து 15 நாட்கள் அங்கு வருமாறும், குருக்களிடம் சொல்ல அங்கு ஓர் ஆலயம் எழுப்புமாறும் சொல்லும்படி பெர்னதெத்திடம் கூறினார். அங்கு தோன்றிய ஒரு நீரூற்றிலிருந்து நீரைப் பருகுமாறும் கூறினார். பாவிகள் மனமாற்றத்திற்காக ஜெபிக்கவும் சொன்னார்.

அன்னை மரியாள் காட்சியளித்த அந்த குகையின் அடையாளமாகத் தான் இன்று பெரும்பாலான நம் ஆலயங்களில் லூர்தன்னை கெபிகள் நிறுவப்படுகின்றன.

இறுதியாக இந்த மாதம் 11 -ம் தேதி நாம் லூர்து அன்னையின் விழாவைக் கொண்டாடப் போகிறோம். மரியாள் புனித பெர்னதெத்திடம் விடுத்த வேண்டுகோளை நாம் நினைவுகூர்ந்து பாவிகள் மனமாற்றத்திற்காக ஜெபிப்போம். நாமும் பாவ வாழ்க்கை வாழ்ந்து கெண்டிருக்கிற பாவங்களிலிருந்து விடுபட்டு தூய வாழ்வு வாழ, இறையருள் பெற மரியாளிடம் ஜெபிப்போம். ஜெபமாலை சொல்வோம் ஜெபமாலையே ஜெயம்.

- தொடரும்...

# தங்க இதயத்தின் அன்னை

*அருட்தந்தை.* **டெல்லிஸ் ரோச்,** *பிரான்ஸ்*

1932 மற்றும் 1933 ஆகிய இரண்டு ஆண்டுகளும் அன்னையின் தரிசனத்தால் பெல்ஜியம் நாடு ஆசிர்வாதிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு ஆண்டுகளிலும் அன்னை வெவ்வெறு இடங்களில் காட்சி தந்திருக்கிறார். அதில் போரான் (Beauraing) என்ற ஊரை பற்றியும் அங்கே அன்னை தங்க இதயத்தோடு காட்சி தந்த நிகழ்வையும் இம்மாதம் பார்ப்போம். போரான் (Beauraing) என்ற ஊர் பிரான்ஸ் நாட்டின் எல்லையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் பெல்ஜியம் நாட்டில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம். அன்றைக்கு 2000 மக்கள்தொகை மட்டுமே கொண்ட சிறிய கிராமம் அது. குளிர்பனி பெய்யும் நவம்பர் மாதம் 29ஆம் தேதியான அன்று ஆல்பர்ட், பெர்னான்டெ, கில்பெர்ட் மற்றும் ஆண்ட்ரே என்ற நான்கு பள்ளி மாணர்வர்களும் மாலை பொழுதில் ஆல்பெர்ட்டின் தங்கையை அழைத்து வர அருகில் உள்ள கன்னியர் மடத்தை நோக்கி நடந்தார்கள். மடத்தின் ஒரு பகுதியில் லூர்து அன்னை கெபியுள்ளது. இந்த நால்வரும் கெபியை கடக்கும் போது அன்னை மரியாள் வெண்ணிறை ஆடையில் அவர்கள் முன் தோன்றினார். ஒன்பது முதல் பதினைந்து வரை உள்ள சிறுவர்கள் என்பதால் ஏதோ ஒன்றை கண்டதை போல் பயந்து மடத்தின் வாயிலை நோக்கி ஓடினார்கள். வாயில் கதவை திறந்த சகோதரியிடம் தாங்கள் பார்த்ததை சொன்னார்கள். அன்னை மரியாளை போல இருந்தார்கள் என சொன்னவர்களை மடத்தின் கன்னியர்கள் நம்பவில்லை. இன்றும் சிறுவர்களின் கதையை யார் தான் முழுமையாக நம்புகிறாரகள்?. பின்பு தங்கள் வீடுகளுக்கு ஓடியவர்கள் தங்கள் பெற்றோர்களோடு பகிர்த்தார்கள். ஆனால் அவர்களும் நம்பவில்லை. அந்த இரவு கடந்து போனபிறகும் பலமுறை அன்னை இந்த சிறுவர்களுக்கு காட்சி தந்திருக்கிறார். நவம்பர் மாதம் 29, 1932 முதல் ஜனவரி 3,1933 வரை அன்னை மரியாள் 33 முறை காட்சி தந்திருக்கிறார். டிசம்பர் 4 தேதி (1932) அன்று தன் அடையாளத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு காட்சிக்கு பிறகும் மக்கள் மத்தியில் இந்த செய்தி பரவியது. அதனோடு மரியாளின் விசுவாசமும் தோன்றியது. தினந்தோறும் அன்னை காட்சி கொடுக்கவில்லை என்றாலும் ஒவ்வொரு இரவும் காட்சி கண்டஇடத்தில் செபமாலை செபித்தார்கள். இவ்வளவு காட்சிகளை கொடுத்த அன்னை என்ன செய்திகளை கொடுத்தார் என்று பார்த்தோமென்றால் :

i) மிகவும் நன்றாக இருங்கள்

ii) நீங்கள் எப்போதும் நல்லவராக இருப்பீர்கள் என்பது உண்மையா?

iii) ஒரு சிற்றாலயம்

iv) எனவே மக்கள் இங்கு யாத்திரை வருகிறார்கள்

v) எப்போதும் ஜெபியுங்கள்

vi) நான் பாவிகளை மாற்றுவேன்

vii) நான் கடவுளின் தாய், விண்ணக ராணி

viii) நீங்கள் என் மகனை நேசிக்கிறீர்களா, என்னை நேசிக்கிறீர்களா?

ix) பிறகு எனக்காக நீங்களே தியாகம் செய்யுங்கள்" .

இதில் குறிப்பாக அன்னை தனக்கு ஒரு சிற்றாலயத்தை கட்ட சொல்லியிருக்கிறார். பின்பு இடைவிடாமல் செபிக்க அழைத்திருக்கிறார். அன்னை ஒவ்வொரு முறையும் காட்சி கொடுக்கும் பொது இந்த சிறுவர்கள் முழங்கால் படியிட்டு வேண்டியவர்களாய் பரவச நிலையில் அன்னையை சந்தித்து இருக்கிறார்கள். இதை கூடி பார்த்த மக்கள் மனதிலும் மரியாள் மீதான பக்தி வளர்ந்தது. இன்னொரு முறை அன்னையின் இதயம் தங்க நிறத்தால் இருப்பதை பார்த்தார்கள். இறுதியாக அன்னை காட்சி கொடுத்த போது 30,000 மக்கள் பங்கேற்றார்கள் என வரலாற்றில் காண படுகிறது. இன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் அன்னையின் இடத்தை நோக்கி செல்கிறார்கள். ஏறக்கொறைய பதினாறு ஆண்டுகள் பிறகு திருஅவை அன்னையின் இக்காட்சிகளை அங்கீகரித்தது. பிற்காலத்தில் ஒருவரை தவிர்த்து நான்கு சிறுவர்கள் திருமணம் செய்து பிள்ளைகளை பெற்று வாழ்ந்தார்கள். இருவருடைய கல்லறைகள் அந்த ஊரில் இன்றும் அமைந்துள்ளது. புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் மே 18,1985 ஆண்டு அன்று அன்னையின் பெயரால் எழுப்பப்பட்ட ஆலயத்தை புனித ஸ்தலமாக அறிவித்தார். சிறுவர்களிடமிருந்து தொடங்கிய அன்னை மரியாள் இன்று உலகின் எதோ ஒரு பகுதியிலிருந்து இவ்வரலாற்றை படிக்கும் நம்மையும் அன்னை தன் வசப்படுத்துகிறார். தொடர்ந்து அன்னையின் காட்சிகளை தேடி பயணமாவோம்....

# மனிதநேயமா ? நம்பிக்கையா ?

சகோ. **சது,** சேவூர்

நம்பிக்கை என்பது நூறாவது படி என்றால்,
துணிச்சல் என்பது தொண்ணூற்றி ஒன்பதாவது படி
வெற்றி என்பது நூற்றி ஒன்றாவது படி என்றால்
முயற்சி என்பது முதல்படி

எனவே படிப்படியாய் உன்னுள் தன்னம்பிக்கையை நேர்மறை எண்ணங்களோடு வளர்க்கும் போது சாதனையாளன் ஆகின்றான். சான்றோனாய் மாறுகின்றான் என்பது திண்ணம்.

திருவிவிலியத்தில் நாம் பல எடுத்துக் காட்டுக்களைக் காணலாம். இருப்பினும் மாற்கு 2:1-12 ல் நாம் காண்பது முடக்குவாத முற்ற மனிதன் குணம் பெரும் நிகழ்ச்சி. இதை நாம் பலமுறை படித்து இருக்கிறோம். இந்த பகுதியில் நம்பிக்கை துணிச்சல் முயற்சி, வெற்றி என்ற நான்கு நிலைப்பாடுகளை காண்கிறோம். ஆம் அந்த நான்கு மனிதர்களிடமும் ஒன்றிணைந்த செயல்பாடாக இது அமைந்து காணப்படுகிறது. ஒவ்வொரு மனிதரிடத்திலும் இது காணப்பட்டாலும் திருமுழுக்குப்பெற்று கடவுளின் குழந்தைகளாக உள்ளவர்களிடத்தில் இது குறைவுபடாமல் நேர்நிலையோடு காணப்பட வேண்டும். அந்த மனிதனை நான்கு பேர் சுமந்து வருகிறார்கள். சாதாரணமாக உலகத்தில் நாம் காண்பது இறந்தவர்களைத்தான் நான்கு பேர் சுமந்து செல்கிறார்கள். மருத்துவமனையில் இரண்டு பேர் தான். ஆனால் இந்த மனிதன் உலகத்தினரின் கண்களுக்கு இறந்தவன் போலத்தான் இருந்தான் என்பதை அவனது நிலைப்பாட்டிலிருந்து அறிகிறோம். அடங்கிப்போனவன் முடங்கிப் போனவன். உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தவனை சுமந்து வந்த அந்த நால்வர் பாராட்டுக்குரியோர்களே, அந்த நால்வர் யாராய் இருப்பார்கள் என்று நாம் பார்க்கும் போது உற்றார், உறவினர், ஊர்க்காரர், நண்பர் என இந்த நால்வரும், இணைந்து செயல்படுகின்றார்கள். அதனால் தான் செத்தாலும் தூக்கிப்போட நமக்கென்று நாலுபேர் வேண்டும் என சொல்வார்கள். எனவே ஒரு மனிதன் பிறந்தது முதல் கல்லறைக்குச் செல்லும்வரை நமக்கென்று நாலுபேர் வேண்டும் என்பது உண்மையிலுமே உண்மை. இன்று நமக்கு நான்கு பேரை வைத்திருக்கிறோமா ? என்பது பார்த்தால் 90 சதவீதம் பேருக்கு இல்லை என்ற பதில்தான் வரும். அதற்கு மாறாக நான்கு விலையுயர்ந்த அலைபேசிகளை வைத்துக் கொண்டு தன்னை அனைத்து வகையிலும் தனிமை படுத்திக் கொண்டு வாழ்கிறோமா ? என சிந்தித்துப் பார்ப்போம்.

நாம் நமது வாழ்வில் அன்பை மையப் பொருளாக வைத்து வாழாததே. ஆனால் கிறிஸ்து அன்பின் காரணத்தால்தான் ஓய்வு நாளாக இருந்தாலும் மனித நேயம், மனித மாண்பை உயர்த்திப் பிடிக்க அன்பை வெளிக்காட்ட முடக்குவாத முற்றவனை ஊதாரி தந்தையைப் போல் அவனது பாவங்களை மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். பாவத்தின் தண்டனை தான் நோய் என்ற எதிர்மறை எண்ணங்களைக் கொண்டிருந்த பரிசேயர், சதுசேயர்களின் தவறான எண்ணத்தையும் சட்டம், சம்பிரதாயங்களையும் தகர்த்தெரிகிறார். இன்றும் சிலர் விடாப்பிடியாய் உடும்புபிடியாய் நம் பங்குகளில் வலம் வருவதை நாம் காணலாம். அன்பென்னும் மகுடிக்கு அடி பணியாத நாகம் உண்டோ ? எனவே நம்பிக்கை விடாமுயற்சியின் வழியாக வெற்றியின் படிக்கட்டில் ஏறிச்செல்ல அன்பென்னும் ஏணி தேவை. அதனால் தான் அன்பே பிரதானம் சகோதர அன்பே

பிரதானம் என்கிறோம்.

இந்த நால்வரைப் போல் நம்குடும்பம் என்னும் உலகத்தில் அப்பா, அம்மா, அண்ணன், தங்கை என்ற நால்வரிடமும் ஒரே சிந்தனையும், ஒரே குறிக்கோளுடன் ஒற்றுமை உணர்வுகளுடன், உறவை உதாசினப்படுத்தாமல் தாயாய் தந்தையாய், சகோதரனாய், சகோதரியாய் துலங்கும் இயேசுவைப்போல் அன்பை ஆயுதமாகக் கொண்டு வாழும்போது, இந்த நால்வரும் நம்பிக்கையின் நாயகர்களாக, முயற்சியின் தூதுவர்களாக, வெற்றியின் நாயகர்களாக துலங்கமுடியும். அப்போது நாசரேத்தூர் குடும்பத்தில் விளங்கிய நிலைப்பாடுகளை இங்கே காணலாம்.

இந்த பூமிபந்து நம்பிக்கை நிறைந்த மனிதர்களாலும் பிறர் அன்பு நிறைந்த மனிதர்களாலும் இன்றும் இயங்குகிறது என்றால் மிகையாகாது. நமது நம்பிக்கை வாழ்வில் அருள்ஒளி தொடர்ந்து வீச வேண்டும். நாம் திருமுழுக்கில் பெற்ற அந்த ஒளியை, அருளை விண்ணகம் கொண்டு சேர்க்க நமக்கு நாமே முடியாத நிலையில் இருக்கிறோம். எனவே இதற்கும் இயேசு, தூய ஆவி, அன்னை மரியாள், புனிதர்கள் என்ற நான்கு பேரின் உதவியும், அருளும், வழி நடத்துதலும் நமக்குத் தேவை. எனவே நம்மை விண்ணகத் தந்தையுடன் தூக்கிச் செல்ல, அழைத்துச் செல்ல இவர்களால்தான் முடியும். எனவே பந்தலைப் பற்றிக் கொள்ளும் திராட்சைக் கொடிபோல இவர்களைப் பற்றிக் கொள்வோம். அப்போதுதான் முடக்குவாத முற்ற மனிதன் எழுந்து சென்றது போல் நாமும் விண்ணகம் செல்ல முடியும்.

**ஒவ்வொரு விடியலையும் நம்பிக்கையுடன் எதிர்கொள்**
**ஒவ்வொரு இரவிலும் நம்பிக்கையுடன் தூங்கப்போ**

---

# மருத்துவ குறிப்புகள்

– சுவாமி ஆ. லூயிஸ்

**நலமிகு புனித வாழ்வு**

கடவுள் அனைத்தையும் (இயற்கை) அனைவரையும் (மனிதம்) நல்லதாகவே படைத்து பராமரித்து வருகிறார். நமது நாட்டிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப நலமுடன் வாழ நம்மை வளர்த்துக் கொள்வோம்.

**1. யோகாவழி ஏசு வழி**

உடலின் இசைவான அசைவு, பிராணப் பயிற்சி, தன் உணர்வு – இறை உணர்வு இவைகளுடன் எளிதான யோகப் பயிற்சியை தங்களுக்குத் தாங்கள் விதி வகுத்து, தொடர் பயிற்சியை மேற்கொள்வீர்.

உணவுமுறை, வாழ்க்கைமுறையை எளிதாக்கிக்கொள்வீர்.

பாதங்களையும், கைகளின் முன்னும் பின்னும் அழுத்திவிடுவதால் உடல் முழுவதும் உள்ள நரம்பு மண்டலம் அனைத்தும் உயிரோட்டம் பெறும் சுகம் மலரும்.

**2. உணவே மருந்து மருந்தே உணவு**

நமது உடலில் ஒரு சுப்பி சுரக்கும் திரவத்தை வைத்து உலகத்தில் உள்ள அனைத்து நோய்களையும் குணப்படுத்த முடியும். இதற்கு நான்கு கூறுகள் மிக முக்கியம்.

1. அறிவு 2. இரத்தத்தின் அளவு 3. இரத்தத்திலுள்ள பொருட்கள்

4. அது நல்ல பொருட்களாக இருக்க வேண்டும்.

சுத்தமான இரத்தம் எல்லா நோய்களையும் குணப்படுத்தும். உடம்பிலுள்ள அறிவு நாம் சாப்பிடும் உணவை இரத்தமாக மாற்றுகிறது. நாக்கு சுவையை பிராண சக்தியாக மாற்றும். அறுசுவை மூலம் பிராண சக்தி கிடைக்கின்றது.

– தொடர்ச்சி 14 பக்கம்

# தொலைத் தொடர்பும், தொலைந்த உறவுகளும்

- சகோ. **ஜோசப்**

இறை இயேசுவில் அன்புக்குரிய வாசகப் பெருமக்களே!

ஒருமுறை திருநெல்வேலியிலிருந்து கேரள மாநிலத்திற்கு தொடர் வண்டியில் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. நான் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிர்புறத்தில் ஒரு இளம் தம்பதி தங்களது ஏறக்குறைய 3அல்லது 4 வயதுடைய ஒரு பெண் குழந்தையுடன் அமர்ந்திருந்தார்கள். வண்டியில் ஏறிய சிறிது நேரத்தில் அந்தக் குழந்தையின் கையில் அலைப்பேசியில் ஏதோ ஒன்றை ஆன் செய்துவிட்டு கொடுத்துவிட்டார்கள், நாகர்கோவில் தொடர்வண்டி நிலையம் வருவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு தான் அந்தப் பிஞ்சுக் குழந்தையின் கையிலிருந்து அதை வாங்கினார்கள், ஏறக்குறைய 1அரை மணிநேரம் அந்தக்குழந்தையானது அருகில் இருந்த யாரிடமும் பேசாமல் அலைப்பேசியில் ஓடிக் கொண்டிருந்ததை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தது. பெற்றோர் இருவரும் ஆளுக்கு ஒரு திசையில் வேடிக்கை பார்த்துக் கொண்டு தங்களின் குழந்தையின் பக்கம் ஒருமுறை கூட திரும்பி பார்க்கவில்லை.



வாசகப் பெருமக்களே, நாம் அனைவரும் சிறுவயதில் எத்தனையோ முறை நமது பெற்றோருடன் பயணம் செய்திருப்போம், அவ்வழிப்பயணத்தின் போது நாம் கேட்கும். ஒவ்வொரு கேள்விக்கும் சிறந்த விளக்கங்களையும் சில சமயங்களில் அதன் வரலாற்றையே துல்லியமாகவும் அவர்கள் நமக்கு விவரித்துக் கூறிய காலங்கள் தான் நினைவுக்கு வரும், ஒவ்வொரு நெடுந்தூர பயணத்திலும் பயணத்தொலைவும் அதற்கேற்றவாறு கதையின் நீளமும் அமையும் இப்போது அப்படியா? என்று வாயைப் பிளந்து கொண்டு கேட்க மட்டுமே முடியுமே தவிர நிஜத்தில் எட்டாக் கனியாகவே மாறிவிட்டது.

வீட்டிலோ மற்றொரு பரிதாபமான சூழ்நிலை குழந்தைகள் ஆளுக்கு ஒருமூலையிலும், இல்லத்தரசியோ தொலைக்காட்சி நாடகங்களிலும் நாளின் வேலைப்பளுவையும், தனிமையையும் போக்க இல்லத் தலைவனோ மது மற்றும் மாது இவ்விரண்டில் எதாவது ஒன்றில் தன்னை தொலைத்து விடுகிறான். இதன் உச்சம் தான் நாம் தினமும் செய்தித்தாள்களில் காணும் கள்ளக்காதல் கச்சேரிகள்.

சமூக வலைத்தளங்களே உலகம் என்று எண்ணி அதிலே தவம் கிடந்து வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொண்டே பலர் எனக்கு கொடுத்து வைத்தது இவ்வளவு தான்? என்ற ஒரு விரக்தியிலும் அல்லவா வாழ்ந்து வருகின்றனர், வலைத்தளங்களில் சிக்கிய மீன்கள் பல சின்னாபின்னமான கதைகளையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.காலையில் எழுந்தவுடன் 300 பேருக்கு குட்மார்னிங் என்ற தகவலை அனுப்பும் நபர், தன் உடன் வாழ்வோரோடு அதை வாய் திறந்து சொல்ல தயங்குவதேன், ஆன்லைனில் நற்செய்திப் பணி என்ற பெயரில் தினமும் பலரோடு நற்செய்தி வசனங்களையும், சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்வோர் எப்பொழுதாவது கூட்டு ஜெபங்களில் கலந்து கொள்வதையும் திருப்பலிக்கு வருவதையும், அவ்வாறு வந்தாலும் கடவுளின் மீது இருக்கும் அன்பைவிட, கோவிலின் சுற்றுச்சுவர் மீதுள்ள

*அக்கறையால் அதை சாயாமல் பார்த்துக் கொள்வதையும் அல்லவா வழக்கமாக கொண்டுள்ளனர்.*

*மனிதனால் உருவாக்கப்பட்ட சமூக வலைத்தளங்களுக்கும், தொலை தொடர்பு சாதனங்களுக்கும் எந்தவித உறவும், உணர்வும் கிடையாது, ஆனால் மனிதர்களாகிய நாம் தாய் கருவில் இருக்கும் போதே உறவுகளாலும், உணர்வுகளாலும் பிணைக்கப்பட்டுள்ளோம், பிறிப்பிலிருந்து நாளுக்கு நாள் அவை வளர்ச்சி அடைய தொடங்குகின்றன. உறவும், உணர்வும் ஒருமனிதனை முழுமையானவனாக மாற்றும் கடவுள் அருளியகொடைகள், இவ்விரண்டையும் நாம் சக மனிதரோடு பகிர்ந்து கொள்ளும் போது தான் நாம் முழுமையடைய முடியும் என்பது தான் உண்மை. அதைத் தவிர்த்து உயிரில்லா ஊடகங்களுடனும், சாதனங்களுடனும் இவற்றை பகிர்ந்து கொள்ளும் போது நமக்கு திருப்பி கிடைப்பது தனிமையும் வெறுமையும் தான்.*

*நமது குடும்பங்களில் அன்பும், அமைதியும் செழித்தோங்க தினமும் ஏதாவது ஒருமணி நேரம் நம்மிடம் உள்ள தொலைதொடர்பு சாதனங்களை சுச்ஆப் செய்துவிட்டு குடும்பத்தினரோடு பேசி சிரித்து மகிழ்ந்து உறவையும், உணர்வுகளையும் பகிர்ந்து கொள்வோம், அப்போது தான் உறவுகள் தொடரும் உண்மையும் மலரும், இறைவனின் அன்பும் அரவணைப்பும் ஆசீர்வாதமும் கிடைக்கும், தொலைந்த உறவுகள் சூரியனை கண்ட தாமரையைப் போல் மலரும்.*

---

# இளைஞர் ஆண்டு - 2020 - இறைவேண்டல்

**எங்கள் தாயும் தந்தையுமான இறைவா !**

**இளமைத் துடிப்புடன் எம் திருஅவையும் சமூகமும் இயங்க இளைர்களைக் கொடையாக வழங்கியமைக்கு நன்றி கூறுகின்றோம்.**

**அவர்களில் இளைஞர் இயேசு உயிராற்றலுடன், இன்றும் வாழ்கிறார் என்பதைக் கண்டுகொள்வதற்குத் தூய ஆவியாரை எம்மில் பொழிவதற்காக நன்றி கூறுகின்றோம்.**

**எம் இளைஞர்கள் இயேசுவோடு நட்புறவிலும் உடன் வாழும் மனிதரோடு தோழமையிலும் வளரச் செய்தருளும்.**

**உடன்பயணிக்கும் மூத்தோருடைய வழிநடத்துதலில், மண்சார் பண்பாட்டு வேர்களைப் பேணிக்காத்து தற்சார்புப் பொருளாதாரத்தை உருவாக்க உறுதி தந்தருளும்.**

**போதைப் பொருட்களுக்கும் தவறான செயல்களுக்கும் இடம் கொடாமல் ஆற்றல்மிகு ஆளுமையை உருவாக்கச் செய்தருளும்.**

**எண்மின் ஊடகங்களைப் பொறுப்புணர்வுடன் கையாண்டு, உம் நற்செய்திப் பணிக்குப் பயன்படுத்த அருள் தாரும்.**

**சாதி, மத வேறுபாடுகளையும் பாலினப் பாகுபாடுகளையும் அகற்றி சமத்துவச் சமூகம் படைக்க வழிகாட்டியருளும். இயற்கையோடு நல்லுறவு கொண்டு, சுற்றுச் சூழலைப் பாதுகாத்து, சமூக அக்கறையும் அரசியல் ஈடுபாடும் கொண்டு, அழைத்தலைத் தெளிந்து தேர்ந்துகொள்ளத் துணிவைத் தந்தருளும். இவ்வாறு இளைஞர் இயேசுவின் மனநிலையில், ஆற்றலோடு மாற்றம் நோக்கிப் பயணிக்கும் நல் இளைஞர்களாக வாழச் செய்தருளும். ஆமென்.**

# அன்பில் கனியும் வாழ்த்து

- சகோ. **ஜூலி,** சென்னை

கடவுளின் அன்பை அருளை, நட்புறவை மூவொரு கடவுளின் வழியாக பெருகிறோம் என்பதை இறுதியாக பார்த்தோம். அதில் கடவுளின் அன்பை நாம் எப்படியெல்லாம் பெறுகிறோம் என்பதை தொடக்க நூல் முதல் திருவெளிப்பாடு வரை பரவியிருப்பதை நாம் அறியலாம். கடவுள் பெற்ற தாயை விட நம்மை மேலானவிதத்தில் அன்பு செய்வதை நாம் காண்கிறோம். ஏன்? தன் மகனையே நமக்கு தந்து மகன் வழியாக தமது அன்பை வெளிப்படுவதையும் காண்கிறோம். உலகப் படைப்பு வழியாக அன்பின் பரிமாணங்கள் வெளிப்படுவதையும் காண்கிறோம். கடவுளே தாமாக முன்வந்து தமது அன்பை விவிலியம் வழியாக, தாம் சந்திக்கும் மனிதர்கள் வழியாக வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

ஆபிரகாம், லோத்துவுக்கு நாடு முழுவதையும் தந்து என்றென்றும் உன்னுடைய வழி மரபினருடன் இருப்பதாக வாக்கு தருகிறார்.

ஆபிராகம், ஈசாக்கு, யாக்கோபுக்கு ஆசீயையும் உடன்படிக்கையும் தந்து அவர்களோடு அன்பு நெகிழ உறவாடுவதையும் காண்கிறோம்.

இறைவாக்கினர் எசாயா, ஒசே வழியாக, தாயின் அன்பு, கணவன், மனைவி அன்பு என அன்பின் முழுமையை வெளிப்படுத்துகிறார். ஒளி உண்டாகுக என தொடங்கி மனிதனின் படைப்பு வரை உள்ள அனைத்தையும் ஆளவும், பெயர் சூட்டவும் பணித்து அன்பு காட்டுவதை காண்கிறோம். நாம் அவர்களின் கடவுளாகவும், அவர்கள் நம் மக்களாகவும் இருப்பார்கள் என்று மீண்டும் மீண்டும் கூறி தமது அன்பை மனிதன் மீது பொழிவதை காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் அவரது அன்பினால் நெஞ்சம் நெகிழவதை காண்கிறோம், பசியால் சோர்ந்த மக்களுக்கு உணவு தந்து, மரணப்பிடியிலிருந்தவர்களை மீட்பது, விதவையின் மகனுக்கு உயிர் தந்தது இப்படி நிறைய சொல்லிகிட்டே போகலாம், மானிடர் நடுவே இருப்பதே நமக்கு பேரானந்தம் என்பதால் அல்லவா, நம்மோடு இம்மானு வேலாக தங்கி உள்ளார். அதுமட்டுமல்ல, நற்கருணை வடிவில் நம்மோடு காலமெல்லாம் தங்கி வாழ்கிறார். தம் மகனை அனுப்பியதன் வழியாக அவரது அன்பு முழுமையாக வெளிப்பட்டதை காண்கிறோம். நம் ஆண்டவர் கடவுளின் அன்பை பலவகையில் படம் பிடித்து காட்டுகிறார். நலம் புரியும் அன்பு கடவுளின் அன்பு, தொடக்க நூல் இதை தெளிவாக காட்டுகிறது அளவற்றஅன்புக் கடவுளின் அன்பு பலுகிய போதும், ஊதாரி மைந்தனின் உவமையில் மனிதனை தேடிவரும் அன்பையும், பத்து கற்பனை வழியாக வழிகாட்டும் அன்பையும் நாம் காண்கிறோம், உள்ளொளி அருளும் அன்பு கடவுளின் அன்பு, நிபந்தனையற்ற அன்பு கடவுளின் அன்பு முடிவில்லா அன்பு, கடவுளின் அன்பு, கைம்மாறு கருதா அன்பு கடவுளின் அன்பு, ஈடு இணையற்ற அன்பு கடவுளின் அன்பு, தம்மையே நமக்காக வழங்கிடும் அன்பு கடவுளின் அன்பு, இப்படிப்பட்ட அன்பை நாம் உணரத்தொடங்கிவிட்டால் நமக்கு எந்த கவலையும், பயமும் இருக்கவே முடியாது.

ஒரு சிறுவன் ஒருநாள் தன் தாயிடம் ஒரு சிறு தாளை நீட்டினான் அதில் இன்று

*நான் கடைக்கு போய் வந்தேன், அதற்கு கூலி 50 காசு சின்னத்தம்பியை பார்த்துக் கொள் என்றாய், அதற்கு கூலி ஒரு ரூபாய், நன்றாக படிக்கச் சொன்னாய், படித்து நல்லமதிப்பெண் பெற்றிக்கிறேன், அதற்கு கூலி 5 ரூபாய், விருந்தினர் வந்தபோது அமைதியாக கூச்சல் போடாமல் இருக்கச் சொன்னாய் அதற்கு கூலி ரூ.10/- ஆக மொத்தம் எனக்கு நீ கொடுக்க வேண்டியது ரூ.1650/- என்று எழுதியிருந்தான். அதை வாசித்து பார்த்த் தாய் ஒரு தாளில் , நான் உன்னை பத்து மாதம் என் வயிற்றில் சுமந்திருந்தேன், உனக்கு 3 ஆண்டுகள் பால் ஊட்டினேன், உன்னை இத்தனை ஆண்டுகளாக உணவூட்டி வளர்க்கிறேன். நீ நோயுற்ற போது உறங்காமல் உன் அருகில் இருந்து பார்த்துக் கொண்டேன், உனக்காக எத்தனை நாட்கள் கண்ணீர் விட்டேன். ஆக இதற்கெல்லாம் நீ கூலி கொடுக்க வேண்டாம், என்ற கடிதத்தை தாய் சிறுவனிடம் கொடுத்ததும் படித்து விட்டு வருந்தி கண்ணீர் வடித்தான், நாம் எத்தனை முறை இந்த சிறுவனைப்போல் கடவுளிடம் முறையிட்டு வந்துள்ளோம். இப்படிப்பட்ட மனநிலையில் நாம் வாழவில்லையா?*

*ஆம், அன்பர்களே கடவுளின் அன்பு உயிர்மூச்சிலும் நெருக்கம்மானது, கடவுளின் அன்புக்கு பலமுகங்கள் உண்டு. கடவுளின் அன்பு தாயன்பிலும் மேலானது, நம்வாழ்க்கை சூழலில் கடவுளின் அன்பை உணர்கிறோமா ? வகை வகையாக அன்பு காட்டும் கடவுளுக்கு நாம் எந்த வகையில் நன்றி செலுத்துகிறோம்?....*

*(தொடரும்)*

---

**மருத்துவக் குறிப்புகள்**

**1. உணவு (நிலம்) நடைமுறைப் படுத்த வேண்டியவைகள் :**

- ✍ சாப்பிடுவதற்கு முன் பிராத்தனை செய்யுங்கள். பசி வரும்போது சாப்பிடவும்.
- ✍ உணவில் அறுசுவை இருக்க வேண்டும். முதலில் சிறிது இனிப்பு சாப்பிடுங்கள் (வெல்லம்/கருப்பட்டி)
- ✍ நாக்கால் சுவையை ருசித்து பின் விழுங்குங்கள்.
- ✍ சாப்பிடும்போது கண்களை மூடி உதட்டை மூடி மென்று கூழ்போல் அரைத்து பின் விழுங்கவும்.
- ✍ சாப்பிடும்போது அரை மணி நேரம் முன்பும் பின்பும் தண்ணீர் அருந்த வேண்டாம்.
- ✍ சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் மூன்று முறை உள்ளங்கையில் தண்ணீரை உறிஞ்சி குடித்தல் நன்று.
- ✍ குளித்த பின் 45 நிமிடத்திற்குப் பின் சாப்பிடலாம். சாப்பிட்ட பிறகு 2 1/2 மணி நேரத்திற்குப்பின் குளிக்கலாம்.
- ✍ சாப்பிடும் முன் கை, கால், முகம் கழுவவும். கால்களை மடக்கி சம்மணம் போட்டு சாப்பிடுங்கள்.
- ✍ பேசிக் கொண்டே/தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே சாப்பிட வேண்டாம்.

– தொடரும்...

# வேதாகமப் பெண்கள்

## 58. தண்டனைத் தீர்ப்புக்கு தப்பிய "விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்"

திருமதி. A. **சாந்திபாபு**
கருமத்தம்பட்டி.

எல்லோராலும் பாவி என்று பட்டம் சூட்டப்படும் போது, மரண தண்டனையின் முடிவில் வந்து நிற்கும் போது, இனித் தப்ப வழியே இல்லை எனத் தீர்ப்பு அறிவிக்கப்படும்போது, ஒருவர் வந்து, இனி தண்டனைத் தீர்ப்பு இல்லை, உன் தண்டனை ரத்தாகிவிட்டது, என்று கூறுவது சாத்தியமா ? அப்படிக் கூறும் போது விடுவிக்கப்பட்டவரின் உணர்வுகள் எப்படியிருக்கும் ? விபச்சாரத்தில் கையும், மெய்யுமாக பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு இயேசு கொடுத்த மன்னிப்புத் தான் இது. அப்பெண்ணைக் குறித்து இப்பகுதியில் காண்போம்.

**1. விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் : ( யோவான் 8: 1-11)**

இயேசு ஒலிவ மலைக்குச் சென்றார். பொழுது விடிந்ததும் அவர் மீண்டும் கோவிலுக்கு வந்தார். அப்போது மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர். அவரும் அங்கு அமர்ந்து, அவர்களுக்குக் கற்பித்தார். மறைநூல் அறிஞரும், பரிசேயரும் விபச்சாரத்தில் பிடிப்பட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தினார்.

இந்தப் பெண்ணை இயேசுவின் முன்பு கொண்டு நிறுத்தியவர்கள் மறைநூல் அறிஞர்கள். மறைநூலைப் பற்றி நன்கு அறிந்தவர்கள். மறைநூல் போதித்தவர்கள். மறைநூல் அறிஞரும், பரிசேயரும் விபச்சாரம் செய்யும் ஒருவருக்கு என்ன தண்டனைக் கொடுக்க வேண்டும் என நன்கு அறிந்திருந்தனர். இயேசுவின் மேல் குற்றம் சுமத்த, ஏதாவது வேண்டும் என்பதற்காக, அவர்கள் இவ்வாறு செய்தனர்.

விபச்சாரக்காரனும், விபச்சாரியும் கொலை செய்யப்பட வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்தில் உள்ள கட்டளை (லேவி 20:10). ஆனால் இங்கே இவர்கள் அந்த விபச்சாரக்காரனைத் தப்ப விட்டுவிட்டு இந்தப் பெண்ணை மட்டும் மரண தண்டனைக்காரியாக இயேசுவின் முன் நிறுத்தினர். இயேசு அப்பெண்ணை கொலை செய்யக்கூடாது என்று கூறினால், அது திருச்சட்டத்தை மீறினது போலாகும். அந்நாட்களில் இஸ்ரவேலர் உரோமைருடைய ஆட்சியின் கீழ் இருந்தார்கள்.



கொலை செய்யப்படுவதற்கான சட்டத்திட்டங்கள் உரோமை அரசாங்கத்தின் மூலமே நிறைவேற்றப்பட முடியும். இயேசு அப்பெண்ணை கொலை செய்யத் தீர்ப்புக் கூறினால், அது உரோமை அரசாங்கத்திற்கு எதிரான செயலாகிவிடும். இயேசுவோ பதிலேதும் கூறாமல் குனிந்து விரலினால் தரையில் எழுதினார்.

ஆனால், அவர்கள் இயேசுவை விடாமல் கேட்டுக் கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்து பார்த்து, உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும் என்று அவர்களிடம் கூறினார். மீண்டும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.

மற்றவர்களைக் குற்றவாளியாக தீர்ப்பிடும் முன், நம்மை நாமே ஆய்ந்து அறிந்தால் அது நல்லது இயேசுவின் நியாயத் தீர்ப்பைக் கேட்டவர்கள் முதியோர் தொடங்கி ஒருவர்பின் ஒருவராக, அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். இறுதியாக இயேசு மட்டுமே அங்கிருந்தார். அப்பெண்ணும் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

**2. இயேசுவின் தீர்ப்பு:**

இயேசு நிமிர்ந்து பார்த்து, அம்மா, அவர்கள் எங்கே ? நீ குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா ? என்று கேட்டார். அவர், இல்லை, ஐயா என்றாள். இயேசு அவளிடம், நானும் தீர்ப்பு அளிக்கவில்லை, நீ போகலாம், இனிப் பாவம் செய்யாதே என்றார். இயேசு அவள் பாவத்தை மன்னித்தார். அவள் பாவ மன்னிப்பு பெற்றாள். பாவத்திற்கு கிடைக்கும் கூலி சாவு. மாறாக கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு (உரோ 6:23) ஒருவரின் குற்றம் எல்லா மனிதருக்கும், தண்டனைத் தீர்ப்பாய் அமைந்தது போல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதருக்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் அமைந்தது. (உரோ 5:18) இந்த விடுதலை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மட்டுமே கிடைக்கிறது. நமக்கு கிடைக்க வேண்டிய தண்டனையை தன்மேல் ஏற்றுக் கொண்டு, நமக்காக மரித்த இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே இந்த விடுதலையைத் தர முடியும். நம் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு. இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும். (1யோவான் 1:7)

நம் வாழ்வின் பல வேளைகளில், சில தவறுகளைச் செய்தபடியால், ஆலயம் செல்ல மனமில்லாமல், அன்பிய ஜெபங்களில் பங்கு கொள்ளாமல், ஜெபிக்க, விவிலியம் வாசிக்க மனமில்லாமல் குற்ற உணர்வுகளால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கலாம். பாவிகளாகிய நம்மையும் ஏற்றுக் கொள்வது தான் கடவுளின் கிருபை. அவர் அருளும் விடுதலை, புதுவாழ்வு எல்லையில்லாத இன்பத்தையும், சமாதானத்தையும் நமக்குத் தரும் நம்பிக்கையோடு இயேசுவிடம் வருவோம். சாவுக்கேதுவான எந்தப் பாவமாக இருந்தாலும், மனம்திரும்பி, பாவமன்னிப்பு பெற்றால் கடவுளின் பிள்ளைகளாகி, புதுவாழ்வு பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

( தொடரும்)

# சாட்சிகள்



- உடல் சுகம், குடும்பத்தில் அனைவருக்கும் உடல் மனம் சுகம் கிடைத்துள்ளது. - தமிழன்பன், பூண்டி



- மூத்தமகன் வேலைக்கு செல்லவில்லை. வேலை கிடைத்ததால் சாட்சி சொல்லவதாக வேண்டிச் சென்றேன். நல்ல கம்பெனியிலில் வேலை கிடைத்து விட்டது. மாதாவிற்கு நன்றி. - குழந்தைமேரி, கவுண்டம்பாளையம்.



- ஒரு சினைப்பையில் கட்டி இருந்தது. கேன்சர் இருக்குமோ என்று பயந்தேன். மாதாவிடம் வேண்டினேன். சாதாரண கட்டி என்று மருத்துவர் கூறினார். மூச்சுத்திணறல் வந்தது. சரியாக வேண்டும் என்று கோபமாக வேண்டிச் சென்றேன். ரிப்போர்ட் நார்மல் என்று வந்தது. ஜெபித்தால் மூச்சுத் திணறல் நின்றது. சுகம் தந்த மாதாவிற்கு நன்றி. டீனா - பூந்தோட்டம், கருமத்தம்பட்டி.



- பாதத்தின் மொளி ஒரு கீழ் படித்து 22 நாட்கள் ஆனது பஸ் ஏறி வர வேண்டும் என்று வேண்டினேன். கால் எடுக்கணும் என்று மருத்துவர் கூறினார். சரியாகி விடுவேன் என்று நம்பிக்கை கொண்டேன். சரியாகி விட்டது. அற்புத சுகம் தந்த மாதாவிற்கு நன்றி- சுதா, பெருந்துறை.



- பேத்தி LKG, UKG இடம் கிடைக்கவில்லை. பேத்திக்கு பள்ளியில் இடம் கிடைத்தது. - டெய்சி, சோமனூர்.
- எனக்கு நெஞ்சுவலி அதிகமாக இருந்தது. மாதாவின் அற்புத எண்ணெய் பூசி வந்தேன். மாதாவின் தீர்த்தமும் குடித்து வந்தேன். தற்போது பூரண சுகம் பெற்றுள்ளேன். மாதாவிற்கு நன்றிகள் பல. - சாந்தப்பன், சோமனூர்.



- எனது குழந்தைக்கு 1 வயது. குழந்தைக்கு சதை வளர்ச்சி இருந்து வந்தது. மருத்துவர் அறுவை சிகிக்சை செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார். மாதாவிடம் கண்ணீரோடு மன்றாடிச் சென்றேன். அறுவை சிகிச்சை இல்லாமலே சுகம் பெற்றாள். அற்புதம் செய்த மாதாவிற்கு கோடான கோடி நன்றிகள். சத்யா, கணபதிநகர்.



- 2 ஆண்டுக்கு முன் டெங்கு காய்ச்சல் வந்தது. மகன் இறந்ததும் துக்கம் வந்தது. ஐசியூ க்கு கொண்டு சென்றர். சாத்தானே போ என்று கத்தி வேண்டினேன் கதறினேன். உயிர்பிச்சை கேட்டேன். 4%, 5%, 8%, 50% உயிர் வந்தது. கடவுளுக்கு நன்றி கூறினேன். உயிர் பிழைத்தார். ரீட்டா, சோமனூர்.



- துயில் எழுந்ததும் கையில் இழுத்து பார்த்தேன். தோல் ஒட்டிக் கொண்டது. ஊசி போட வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு சொட்டு இரத்தம் கொடுங்கள் என்று வேண்டினேன். இடுப்பில் 2 பக்கமும் சூடாக இருந்தது. மாதா எண்ணெய் எடுத்து தேய்த்து வேண்டினேன். சுகம் பெற்றேன். - பூரணமேரி, அம்ரோஸ்நகர்.



# ஒரு உறவு அழைக்குது

(சிறுகதை) **A.K. மூர்த்தி,** ராஜஸ்தான்

அந்த ஞாயிற்றுக்கிழமை சர்ச் முன்பு அந்த ஆட்டோ வந்துநின்றது, பூஜைக்காக அந்த ஆட்டோவில் வந்த ரெஜினாமேரி ஆட்டோவிலிருந்து இறங்கும்போது, புடவை சிக்கிக்கொண்டு கீழே விழுந்துவிட்டார்.

ஐயோ.... பார்த்துங்கம்மா... என்றுக் கூறி அங்கு நின்றுக் கொண்டிருந்த ஒரு பாப்பா, அவரைத் தூக்கிவிட்டாள், ரொம்ப நன்றிம்மா என்றுக் கூறிவிட்டு சர்ச்க்குள் சென்றுவிட்டார் ரெஜினாமேரி, பூஜை முடிந்து வீட்டுக்குத் திரும்புகையில் உதவி செய்த அந்தப் பாப்பா அங்கு பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள், ரெஜினாவைக் கண்டதும், அந்தப் பாப்பா பிச்சைக் கேட்கத் தயங்கியது. இதைக்கண்ட ரெஜினாமேரி, இங்க வா பாப்பா, நீ பிச்சையா எடுக்கிற உனக்கு அம்மா, அப்பா இல்லையா? நீ சரின்னுச் சொன்னா நான் உன்னை என் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போறேன், ஏன்னா, நானும் தனியாத் தான் இருக்கேன், எனக்குத் துணையாய் இருப்பாய்.

அப்போது அந்தப் பாப்பா, சுற்றும், முற்றும் பார்க்க, தூரத்தில் ஏதோ ஒரு உருவம் வேண்டாம், என்று சைகையில் சொல்ல, அந்தப் பாப்பாவோ ஏதோ யோசித்தவளாய், வேணாங்கம்மா, நான் இங்கேயே இருந்துக்குறேன்.

சரி உன் விருப்பம், இந்த இத வச்சிக்கோ, என்று 50 ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.

ஏம்மா இவ்வளவுப் பணம், கொஞ்சமாக் கொடுங்க போதும் இது பிச்சை இல்ல, உன் செலவுக்கு வச்சிக்கோ, என்றுக் கூறிச் புறப்பட்டாள். அன்று முதல் எப்போதெல்லாம் ரெஜினாமேரி சர்ச்க்கு வருவார்களே அப்பொதெல்லாம் அந்தப் பாப்பாவை அழைத்து உதவி செய்துவிட்டு வருவது வழக்கம் , உதவி உபசரிப்பாக மாறி அவளுக்கு வீட்டு சமையல், துணிகள் என்றுக் கொடுப்பது வரை வளர்ந்துவிட்டது. இப்பேதெல்லாம் ரெஜினாமேரி அடிக்கடி சர்ச் வர ஆரம்பித்தார். காரணம் ஏதோ ஒரு உறவு அந்தப் பாப்பா மூலமாக அழைப்பதுப்போல் அவளுக்குத் தோன்றியது அந்த ஞாயிறு ரெஜினாமேரி பூஜையை முடித்துக் கொண்டு திரும்பும்போது சர்ச் வாயிலில் அந்தப் பாப்பா கையேந்தி நின்றுக் கொண்டிருந்தாள், ரெஜினா அவளைப் பார்த்து உதவி செய்து விட்டு கன்னத்தைக் கிள்ளி முத்தம் கொடுத்துவிட்டுப் புறப்படுகையில் உன் பெயர் என்ன என்றுக் கேட்க அதற்கு அவள் பெயரை அவள் செல்ல எனக்கு இந்தப்பேர் புடிக்கல இனிமே நான் உன்னை ஜெனிட்டா என்றுதான் கூப்பிடுவேன். ஏன்னா என் மகள் வெளிநாட்டில் இருத்தாள் அவள் பெயர் ஜெனிஷா என் மகள் போலவே இருக்கும் நீ ஜெனிட்டா சந்தோஷத்தில் பூரித்துப்போக அவள், ஆண்டி, நான் உங்க வீட்டுக்கு வரட்டுமா? ஏதாவது வேலைப்போட்டுத் தருவீங்களா?

ரெஜினாவுக்கு இன்ப அதிர்ச்சி சந்தோஷம் தாங்க முடியவில்லை, வாப் போகலாம் கை நீட்டி நின்றார். எனக்கு ஆசையா இருக்கு ஆனா இப்ப வேண்டாம் ஆன்ட்டி ஏன் அப்படி சொல்றீங்க இன்னும் எத்தனை நாட்கள் இந்த ஊரில் இருப்பீர்கள். என் பொண்ணு வெளி நாட்டுல மாப்பிள்ளையோட (அவளது கணவர்) இருக்கா. அவ வந்து கூடிய சீக்கிரம் கூட்டிக்கிட்டுப் போயிடுவா அதுவரைக்கும்

இருப்பேன். அதுக்கப்புறம் நான் இங்கத்தானே வந்ததகனும் அதான் வேண்டாம் சொல்றேன். அந்தப் பாப்பா கூறினாள்.

அதற்காக வாழ்நாள் முழுவதும் இந்த சர்ச் முன்னாடியே கிடக்கப்போறியா? அப்படி ஒரு பாக்கியம் கிடைச்சா அதுவே எனக்குப் போதும்மா இங்கு எனக்கு அனுதினமும் இந்த ஜெபமாலை அன்னையின் அருள், அவரை வணங்கும் பாக்கியம், எத்தனையோ நல்ல உள்ளங்களின் உதவி என்று அனைத்தும் கிடைக்கும் போது வேறு என்ன வேண்டும் எனக்கு? உள்ளே பூஜையையும், செபங்களும் ,பிரசங்கமும் நடக்கும் போது நான் வெளியில் அமர்ந்து என்னையே மறந்து அந்த ஜெபமாலை மாதாவின் பாதத்தில் என்னையே அர்ப்பணித்துவிடுகிறேன். கூடவே உங்களை போன்ற நல் உள்ளங்களைப் பார்க்கும்போது, என் தாயின் முகம் பார்க்கும் திருப்தி ஏற்படும், எனவே நான் இங்கேகேயக் கிடந்து இந்த மாதாவே கதி என்று என் வாழ்வை முடித்துக் கொள்கிறேன்.நான் பிச்சை எடுப்பதில் ,என் செலவுப் போக, மீதியை இங்கே அமர்ந்திருக்கும் வயதானவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிடுவேன், அவர்களின் ஆசி, என்னை வாழ வைக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருப்பெண்ணிற்குத் தேவையான அத்தனை பாதுகாப்புகளும், இந்தக் தாய்மரியின் சன்னதியில் கிடக்கும் வரைக் கிடைக்கும், எனவேதான் இவள் பெண்களின் பாதுகாவலி, எனவே நீங்க போயிட்டு வாங்கம்மா சோகம் கலந்து முகத்தோடு சொல்லி முடிந்தாள் அந்தப் பாப்பா

தோல்வி அடைந்தவராய் வீட்டிற்கு வந்தார், ரெஜினாமேரி ஆனால் சிந்தனை எல்லாம் அந்தப் பாப்பாவின்மீதே அடுத்த சில நாட்களில் வெளிநாட்டிலிருக்கும் தன் மகளிடமிருந்து போன் வந்தது.

அம்மா உங்களோட பாஸ்போர்ட் விசா ரெடியாயிடுச்சு இன்னும் இரண்டு நாட்களில் நான் இந்தியா வந்து உங்களை இங்கு கூட்டி கொண்டு வந்து விடுவேன். தயாராக இருங்கள்.

அடுத்த இரண்டு நாட்களில் அந்த மதியவேளை அந்தக் கார் சர்ச் வாசல் வந்து நின்றது அதிலிருந்து இறங்கிய ரெஜினாமேரி சுற்றும் முற்றும் பார்த்தார். அந்தப் பாப்பா கிடைக்கவில்லை, சர்ச் சென்றார். நன்றாக மன்றாடிக் கொண்டார் அந்தப் பாப்பாவிற்கும் சேர்த்து காருக்குத் திரும்புகையில் அந்த மரத்தடியில் களைப்போடுப் படுத்திருக்கும் அந்தப்பாப்பாவைப் பார்த்துவிட்டார். ஜெனிட்டா,

அம்மா என்று ஓடி வந்தாள் அந்தப்பாப்பா.ரெஜினாமேரி அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள் நான் அன்னக்கி சொன்னேன்ல இதோ என் பொண்ணு வெளி நாட்லேர்ந்து வந்திருக்கா நானும் அவக் கூடக் கிளம்புறேன், ஜெனிஷா இங்கவாம்மா,, நான் அடிக்கடி சொல்லேன்ல ஜெனிட்டா அவ இவத்தான் நீதான் அம்மாவோட அந்த ஜெனிட்டாவா, ரொம்ப குயிட் (அழகு) பத்திரமா இரு அம்மாவைக் கொஞ்ச நாளைல அனுப்பி வச்சிடுறேன். வரட்டுமா.... ப்பா... அம்மா நேரமாகுது வாங்கப்போகலாம் கார் புறப்பட்டது. அந்தப் பாப்பாவின் கண்களில் கண்ணீர் கரைப்புரண்டது, இவர்களின் பார்வையில் இன்று வரை நான் ஒரு இளவரசி தேவதை, இனி... நான் ஒரு பிச்சைக்காரி... முகத்தை மூடிக் கொண்டு பொம்மிப் பொம்மி அழதாள்.

கார் ஒரு 10 அடி தூரத்திற்கு நகர்ந்திருக்கும் அப்போது அங்கே மறைவில் மறைந்திருந்த அந்த முரட்டு மனிதன் ஓடி வந்துக் காரை மறைத்தான், கார் நின்றது ரெஜினாமேரியின் முன்பு வந்த அவன் கண்கலங்கியபடி அம்மா உங்கப் பொண்ண

உங்கக்கூடக் கூட்டிட்டுப் போயிடுங்க, இனிமே என்னால வச்சிக் காப்பாத்த முடியாது. நீ என்ன சொல்ற யார் நீ, யாரப் பார்த்து என் பொண்ணுன்னும் சொல்ற புரியாத வராய் கேட்டார், ரெஜினாமேரி அதே அங்கே நிக்கிறாளே நீங்கக்கூட ஜெனிட்டா ன்னு ஆசையா கூப்பிடுவீங்களே அவத்தான் உங்கப்பொண்ணு நீ என்னச் சொல்றே,

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வை நினைவுக் கூர்ந்தான். ரெஜினாமேரி ராஜேஷ் தம்பதியர்க்கு ஒரு பெண் குழந்தை ஆதான் இப்போது காரில் அமர்ந்திருக்கும் ஜெனிஷா அடுத்து ஆண் குழந்தை வேண்டுமென்று காத்திருந்தனர் தவமிருந்தனர் ஆனால் பிறந்ததோ மீண்டும் பெண்குழந்தை, ராஜேஷ் சொல்ல துயரத்தில் அப்போது ரெஜினாமேரியோ (பிரசவ) மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் அவருக்கு இன்னும் தெரியாது அவர் அனுமதித்த இருந்த அடுத்தப் பெட்டியில் ஒரு தம்பதியினருக்கு ஆண் குழந்தைப் பிறந்திருந்தது. அந்தக் குழந்தைராஜ் தான் அவர் ஒரு ஏழை விவசாயி, பிறந்திருக்கும் குழந்தையையும் மனைவியையும் பராமரிக்க பண வசதி இல்லாம் தவித்தான் அப்போது கவலையடைந்துருந்த ராஜேஷிடம் பேச்சுக் கொடுத்தான். எனக்கோ ஏதாவது ஒரு குழந்தை வேண்டும், அவர்களை கவனித்துக் கொள்ள பணம் வேண்டும் உங்களுக்கு பணம் சொத்து உள்ளது அதை பொறுப்பேற்றுக் கொள்ள ஆண் மகன் வேண்டும், நீங்கள் என் மனைவி மயக்க நிலையில் தான் உள்ளாள் சந்தோஷமடைந்த ராஜேஷ் சம்மதித்தார். குழந்தைகள் கை மாறியது ஆண்பிள்ளை ராஜேஷ் வீட்டிற்கும் பெண்குழந்தை அந்த மனிதன் குழந்தைராஜ்யிடம்,

ராஜேஷ் வீட்டிற்குச் வந்த இரண்டு நாட்களிலேயே இறந்துவிட்டது, ராஜேஷ் மனைவியோ உடலில் தெம்பு இல்லாததால் மயக்க மருந்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தியில்லாமல் இறந்துவிடுகின்றாள். பெண் குழந்தை அனாதையாகியது கையில் காசு இருந்த வரை காப்பாற்றிய தந்தை காசு முடிந்ததும், பிச்சை எடுக்க வைத்தான், அந்தப் பெண் குழந்தை இதோ அந்த சர்ச் முன்பு ரெஜினா, அவர்களின் விருப்பப் பெண்ணான ஜெனிட்டாவாக நடந்ததை கூறிமுடித்தான். காரை மறைத்து நின்ற குழந்தைராஜ் அம்மா உங்கமேல உயிரையே வச்சிருந்தா உங்கப் பொண்ணு, தூங்கும்போதுக்கூட ஆன்ட்டி நானும் உங்கக்கூட வரலாமன்னு சொல்லிக்கிட்டே உறங்குறா, இனிமே என்னால அவளக் காப்பாத்த முடியாது இனி அவளுக்கு ஒருத்துணை வேண்டும் நான் எப்படியாவது செத்து மடிஞ்சுப் போறேன் ஆனா உங்கப் பொண்ண நீங்களேக் கூட்டிட்டுப் போயிடுங்க கைக்கூப்பி நின்றான் குழந்தைராஜ், காரிலிருந்து இறங்கிய ரெஜினாமேரி. ஜெனிட்டா என் மகளே.. இது நாள் வரை என் மகள் உன்னை நான் பிச்சைக்காரி கோலத்தில் பார்த்தேனே என்றுக் கூறி ஓடிவந்தார் காரில் அமர்ந்திருந்த மூத்த மகள் ஜெனிஷா தனக்கொரு தங்கைக் கிடைத்த சந்தோஷத்தில் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தாள். அவள் கையில் Flight Ticket அவர்கள் செல்ல இருந்த அவர்களது தலைக்கு மேல் அவர்கள் செல்ல இருந்த Flight பறந்துச் சென்றது.

ஒரு உறவு அழைத்த வேளை மறு உறவு கிடைத்து அதைத்தடுத்தது சகல ஜனங்களைப் பார்க்கிலும், நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா 7:14 )

# தொடர்பா ! அல்லது இணைப்பா !


(யோவா14:6)

Rev. Bro.**T. Joseph Sarto**, BSM.
Karumathampatty.

தூய செபமாலை அன்னையின் பாதுகாப்பில் வாழும் செபமாலையே ஜெயம் வாசகர்களுக்கு சமாதான வாழ்த்துக்கள். இன்றைக்கு இருக்கும் Computer, Cellphone, Digital நவீன உலகத்திலே வாழும் நாம் ஒவ்வொருவரும் தொடர்பில் இருக்கிறோம். ஆனால் இணைப்பில் இல்லை. ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்திச் சொல்ல வேண்டுமென்றால், ஒருவருக்கொருவர் "**Contact** செய்கிறோம். ஆனால் **Connection** இல்லை" ஒரு செல் போனில் இணைப்பு இல்லை என்றால், எப்படி தொடர்பு கொள்ள முடியும்.

எப்படியென்றால், நம் நெருங்கிய உறவுகளிடம் தொடர்பு வைத்துக் கொள்கிறோம். ஆனால் தொடர்ச்சியான இணைப்பில் இல்லாத காரணத்தினால், நம் உறவுகளில் சலிப்பும், வெறுப்பும் வந்து நம்மை ஆட்டிப் படைக்கிறது. இயேசுவோடு இருந்த திருத்தூதர்களும், மக்களும் இதே நிலையில் இருந்தார்கள். எப்பொழுதெல்லாம் இயேசுவோடு இணைந்திருந்தார்களோ அப்பொழுதெல்லாம் மிகுந்த கனிகள், பலன் கொடுத்தார்கள். "**நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது.**"(யோவா15:4)

இன்றைய தியானச் சிந்தனைக்கு "தொடர்பு" - "இணைப்பு" என்றால் என்ன என்பதை நாம் முதலில் தெளிவாகத் தெரிய வேண்டும். சரியான, நல்ல அர்த்தமுள்ள தொடர்பு இல்லாத காரணத்தாலும், தவறான இணைப்பில் இணைந்து விட்டு, அல்லது நம் அலைபாயும் அன்பு மனதை பரிகொடுத்துவிட்டு தவிக்கிறோம் அல்லவா? சரி. தொடர்பு என்பதைக் குறித்தும், இணைப்பைக் குறித்தும் திருவிவிலியத்தின் அடிப்படையில் தியானிப்போமா!




## I. தொடர்பு:

இன்றைய வாழ்வின் நிஜம் என்னவென்றால், நம் வீடுகளில், அலுவல்களில் ஏன் இந்த உலகத்தில் உள்ள எல்லாரும் ஏதோ ஒருவகையில் நிறைய தொடர்பை வைத்திருக்கிறோம். ஆனால் இணைப்பில் இருப்பதில்லை. சிறுவர் முதல் முதியவர்கள் வரை எல்லாருமே அவரவர் சொந்த உலகில் மிகவும் பரபரப்பாக இருக்கின்றனர். நாம் இதுபோல வெறும் "தொடர்பை" பராமரிக்காமல் "இணைப்பில்" வாழ முயற்சிக்கலாமே!

இந்த தொடர்பு எப்பொழுதுமே நல்லதுதான். அறிமுகமில்லாதவர்களிடம் தொடர்பு கொள்வதின் வழியாகத்தான் பல தெரியாத உண்மைகளை தெரிந்து கொள்ள முடியும். உலகத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக புரிந்து கொள்ள முடியும். இந்த தொடர்பில் "நல்ல தொடர்பு" "தீய தொடர்பு" என்று உண்டு.

தீய தொடர்பு நம்முள் இருக்கின்ற பகை உணர்வு, கெட்ட எண்ணங்களால் வெறியாக வெளிவருவது. ஆபேல், காயின் வாழ்க்கையிலே ஆபேல் தன் மந்தையில் கொழுத்த

தலையீறுகளை காணிக்கையாக ஆண்டவருக்குக் கொடுத்தான். காயீன் நிலத்தின் பலனை ஆண்டவருக்குக் கொடுத்தான். தம்பியின் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அண்ணனின் காணிக்கையை ஆண்டவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் கடும் சினம் கொண்டு தீயச் செயலைச் செய்கிறான். நல்ல செயலைக் கண்டு, மனம் பொறுக்கமுடியாமல் தீய செயலைச் செய்பவர்கள் இன்றும் நம் குடும்பங்களில் பலர் இருக்கிறார்கள். (தொ.நூ.4:7) **"நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும்" என்றார்.**

எசேக்கியாவின் மகன் மனாசே தகப்பனின் நல்ல செயல்களுக்குப் பதிலாக தீய செயல்களில் ஈடுபடுகிறான். (2அரச.21:6) **மேலும் அவன் தன் மகனை நெருப்பில் பலியாக்கினான்; குறி கேட்பதிலும் சகுனம் பார்ப்பதிலும் நம்பிக்கை கொண்டு குறி கூறுபவர்களோடும், சகுனம் பார்ப்பவர்களோடும் தொடர்பு கொண்டு ஆண்டவர் திருமுன் தீயன புரிந்து ஆண்டவருக்குச் சினமூட்டினான்.** ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நல்லதும், கெட்டதும் இணைந்திருக்கின்றது, கலந்திருக்கின்றது. இறைவன் கொடுத்த மிகப்பெரிய கொடையாகிய சுதந்திரத்தைப் பயன்படுத்தி நல்லதை நினைத்து, எல்லாரையும் நல் எண்ணத்தோடு அன்பு செய்து வாழ இறைவன் விரும்புகிறார்.

தீய செயல் செய்வோருக்கும், நல்ல செயல் செய்வோருக்கும் தொடர்பு இருக்க முடியாது. எப்படி (சீரா.ஞா.13:17) **ஓநாய்க்கும் ஆட்டுக்குட்டிக்கும் உறவு ஏது? பாவிகளுக்கும் இறைப்பற்றுள்ளோருக்கும் தொடர்பு ஏது?** அப்படியே, (2கொரி6:15) **கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் என்ன உடன்பாடு? நம்பிக்கை கொண்டோர்க்கு நம்பிக்கை கொண்டிராதவரோடு என்ன தொடர்பு?** அப்படியெனில், நாம் ஒவ்வொருவருக்கும் நல்ல தொடர்பு மட்டுமே நம் வாழ்விற்கு நல்ல மனஅமைதியை பெற்றுத் தர முடியும். குறிப்பாக, செல்போன், தொலைக் காட்சியில் இருக்கும் தொடர்பை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை சிந்தித்து, மனம் மாற முயற்சிக்கலாமே!

## 2. இணைப்பு:

நாம் அன்பு செய்பவர்களோடு கொள்ளும் இணைப்பு தூய்மையானதாகவும், கள்ளமற்றதாகவும் இருக்க வேண்டும். இந்த இணைப்பு செல்போன் தொடர்பு போல அல்ல. திருத்தூதர் தோமாவைப் போல நேரடி தொட்டு உணருதலில் வெளிப்படும். தொலை தூதர தொடரை இந்த சந்திப்பின் வழியாக அன்பின் இணைப்பை நெருக்கமாக்குகிறது. (எபே.2:13) **ஒரு காலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்.** அவரோடு இணைந்து செபித்து, இறையருளைப் பெற்றுக் கொடுப்பவர்களாகி விடுவோம். நம் அன்னை மரியாள் திருத்தூதர்களோடு அமர்ந்திருக்கும் போது, தூய ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொடுத்தார்கள். (திதூப.1:14)**அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள்.** நாமும் இணைந்திருந்து செபிப்பபோமா!

நிகழ்ச்சி: ஒரு குருவிடம் நியூயார்க் பத்திரிக்கையாளர் ஒருவர் பேட்டி எடுக்க ஆரம்பித்தார். நிருபர்: **குருவே! உங்களுடைய முந்தைய சொற்பொழிவில் "தொடர்பு மற்றும் இணைப்பு" என்பது பற்றி பேசினீர்கள். அது உண்மையிலேயே மிகவும் குழப்பமாக இருந்தது. சற்று விளக்கி சொல்ல முடியுமா? என்றார்.** குரு: **புன்முறுவலோடு, நிருபர் கேட்ட கேள்வியிலிருந்து**

விஷயத்தை திசைதிருப்புகின்ற விதமாக, அந்த நிருபரிடம் கேள்வி கேட்டார். நீங்கள் நியூயார்க்கில்தான் வசிக்கிறீர்களா? நிருபர்: ஆம். குரு: வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள்? இந்த குரு என் சொந்த வாழ்வைப் பற்றியும், தேவையற்ற கேள்வியையும் கேட்டு தன்னுடைய கேள்விக்கு பதில் தருவதை தவிர்க்க முயற்சிக்கிறார் என்று நிரூபர் நினைத்தார். இருந்தாலும் குரு கேள்விக்கு "என் தாய் இறந்து விட்டார். தந்தை இருக்கிறார். 3 சகோதரர்கள் மற்றும் 1 சகோதரி இருக்கிறார். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்று பதிலளித்தார்.

குரு: முகத்திலே புன்னகையுடன், நீங்கள் உங்கள் தந்தையுடன் பேசுகிறீர்களா? என்று மீண்டும் கேட்டார். இப்போது நிரூபர் சற்று எரிச்சலடைந்து விட்டார். குரு: கடைசியாய் எப்போது அவரிடம் பேசினீர்கள்? நிருபர்: எரிச்சலை அடக்கிக்கொண்டு "ஒரு மாதத்திற்கு முன்பு இருக்கலாம்" என்றார். குரு: உங்களுடைய சகோதர, சகோதரிகளை அடிக்கடி சந்திப்பதுண்டா? குடும்பமாக சந்தித்தது கடைசியாக எப்போது? என்றார். இப்போது நிரூபர் நெற்றியில் வியர்வை தெரிந்தது. இதைப் பார்த்தால் குரு தான் நிரூபரை பேட்டி காண்பது போல இருந்தது.


நீண்ட பெருமூச்சுடன் நிரூபர் சொன்னார், "2 வருடங்களுக்கு முன் கிறிஸ்மஸ் சமயத்தில் சந்தித்தோம்" என்று. குரு: எல்லோரும் சேர்ந்து எத்தனை நாட்கள் இருந்தீர்கள்? புருவத்தின் மீது வடிந்த வியர்வையைத் துடைத்தவாறே நிரூபர் 3நாட்கள் என்றார். குரு : உங்களுடைய அப்பாவின் அருகில் அமர்ந்து காலை உணவு, மதிய உணவு அல்லது இரவு உணவை சாப்பிட்டீர்களா? அம்மா இறந்த பிறகு நாட்களை எப்படி கழிக்கிறீர்கள்? என்று அப்பாவிடம் கேட்டீர்களா? இப்போது நிரூபரின் கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் கீழே விழத் தொடங்கியது.

குரு அந்த நிரூபரின் கைகளை பற்றியவாறு கூறினார், "சங்கடப்படாதீர்கள். கவலையும் கொள்ளாதீர்கள். ஆனால் அவரோடு நீங்கள் இணைப்பில் இல்லை. நீங்கள் அவரோடு இணைக்கப்படவில்லை. "இணைப்பு என்பது இதயத்துக்கும் இதயத்துக்கும் இடையே இருப்பது". ஒன்றாய் அமர்ந்து, உணவை பகிர்ந்து, ஒருவர் மீது ஒருவர் அக்கரை கொண்டு, கைகுலுக்கி, கண்களை நேருக்கு நேர் பார்த்து, ஒன்றாய் சேர்ந்து, நேரத்தை செலவிடுவதுதான் இணைப்பு**(Connection)**".

நீங்கள் உங்கள் சகோதர, சகோதரிகளுடன் தொடர்பில் (Contact) இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் யாரும் இணைப்பில்(Connection) இல்லை என்றார். இப்போது நிரூபர் கண்களை துடைத்துக் கொண்டு, "எனக்கு அருமையான மற்றும் மறக்க முடியாத பாடத்தை சொல்லிக் தந்ததற்கு மிக்க நன்றி குருவே" என்றார்.

அன்பு சகோதர, சகோதரிகளே! நம் வீட்டிலோ, சமுதாயத்திலோ ஒவ்வொருவரும் தொடர்பில் இருக்கிறோம் ஆனால் இணைப்பில் இருப்பதில்லை. நாம் இதுபோல வெறும் "தொடர்பை பராமரிக்காமல் இணைப்பில் வாழ்வோமா!" (1யோவா.5:20) நாம் உண்மையான இறைவனோடும் அவர் மகன் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கிறோம். இவரே உண்மைக் கடவுள். இவரே நிலைவாழ்வு.

தங்களுக்காக செபிக்கும் உங்கள் ஆத்மீக நண்பன். மரியே வாழ்க!



# விவிலிய வினா–விடை

## பிப்ரவரி 2020

**விவிலிய வினா விடை போட்டிகள் போட்டி எண் : 56**

தயாரிப்பு :
**விக்டர் கனகராஜ்**
ஆசிரியர், க.பட்டி

முடிந்த அளவு பிரதி மாதம் 10 –ந் தேதிக்குள் விடைகள் கிடைக்க உதவுங்கள். (வெளியூர் நபர்களுக்கு கடைசி தேதி 15)

### விவிலியப் பகுதி: 1 கொரிந்தியர் 9-16 / நீதித்தலைவர்கள் 1-10 அதிகாரங்கள்

1. யார் எந்த நகரைத் தரைமட்டமாக்கி உப்பை விதைத்தார் ?
2. இரண்டு அந்நிய தெய்வங்களின் பெயர்கள் என்ன ?
3. மிகவும் பருத்த மனிதன் யார் ?
4. கிதியோன் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர் ?
5. ஆட்சோர் என்ற பகுதியை ஆண்ட கானானிய மன்னன் பெயர் என்ன ?
6. காலேபின் மகளின் பெயர் என்ன ? அவளின் கணவர் பெயர் என்ன ?
7. நான் செய்தவாறே கடவுள் எனக்குச் செய்துள்ளார் ? என்று சொன்னது யார் ? அவருக்கு என்ன நடந்தது ?
8. நிலையாய் உள்ள மூன்று யாவை ?
9. எது ஆண்களுக்கு மதிப்பாகாது ?
10. திருச்சபையை கிளர்ச்சியுறச் செய்பவர் யார் ?
11. நம் முன்னோர் எவற்றின் மூலம் திருமுழுக்கு பெற்றார்கள்?
12. பலிப்பொருட்களில் பங்கு பெறுபவர் யார் ?
13. பலரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர பவுல் தன்னை யார் யாருக்கெல்லாம் அடிமையாக்கிக் கொண்டார் ?
14. தீயநட்பு எதைக் கொடுக்கும் ?
15. கடவுள் எதை ஏற்படுத்துபவரல்ல ? எதை ஏற்படுத்துபவர் ?

### டிசம்பர் மாதப் போட்டியின் சரியான விடைகள் :

1) 17 :1 2) 18:7 3) 24:19 4) 22:13,31,32 5) 24:12 6) 20:7, 21:13, 21,27,32,38 7) 23:16
8) 3 :6-9 9) 1 கொரி 1:3 10) 6:20 11) 5:8 12) 8:8 13) 4:11-13 14) 6:7 15)7:9

போட்டியில் கலந்து கொண்டவர்கள் : 29 சரியான விடை எழுதியவர்கள் : 24

### குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் : (பரிசுக்குரியவர்கள்)

முதல் பரிசு A. **ஜெர்சன் பிவின்,** அன்னை தெரசா நகர், கருமத்தம்பட்டி

இரண்டாம் பரிசு J. **எட்வின் ராஜன்,** பெரியார் நகர், கோவை

மூன்றாம் பரிசு S. **ஜெனிபர்,** தென்னம்பாளையம்

### சரியான விடைஎழுதிய மற்றவர்கள் :

**1. பீட்டர் அமல்ராஜ், ராமநாதபுரம், 2. இன்பன்ட் – ஆவாரம்பாளையம், 3.** M.**ஷீபா டயானா, போத்தனூர். 4.**V.D. **ரெஜினாமேரி, அம்மன்புதூர், 5. மரிய அந்தோணி பப்பி – கருமத்தம்பட்டி, 6.**A.**ஜெர்சன் விபின் – கருமத்தம்பட்டி, 7.** A.**ஷான் டோமியன் – கருமத்தம்பட்டி, 8.** P.**விமலா – கருமத்தம்பட்டி, 9.** M.**பிரிஜிட் விமலா – புலியகுளம், 10.மல்லிகா லாரன்ஸ் – திருப்பூர், 11.**I.**ஜான்போஸ்கோ – சத்தி, 12.** A.**யோசுதாஸ் – சத்தி, 13.** J.**ஷீலா அருள் – புத்தூர், 14. பிரின்ஸி – கருமத்தம்பட்டி, 15. லில்லி புஷ்பா – கருமத்தம்பட்டி, 16. சலேத்ராஜ் – நடுஅரசூர், 17.** A.**பிரான்சிஸ் சேவியர் – வடமதுரை, 18.** Rev.Sis. **லாரா – திருப்பூர், 19.** A. **ஆளி மரியா – கருமத்தம்பட்டி, 20.**S.**ஜெனிபர் – அரசூர், 21.**A.**டேவிட் அருள்பிரகாசம் – கோவைபுதூர், 22.**A.**லில்லி – பரமக்குடி, 23.**J.**எட்வர்ட் ராஜன் – நேருநகர், 24.** C.**வின்செண்ட் – மதுக்கரை**

சரியான விடை எழுதிய அனைவருக்கும் பரிசு உண்டு.

### குறிப்பு :

1. விடைகளை எழுத வேண்டியதில்லை. எழுதினால் தவறல்ல. அதிகாரம், வசனம் எண் குறிப்பிட்டால் போதும்.
2. விடையுடன் முகவரி மற்றும் தொலைபேசி / அலைபேசி எண்ணைக் குறிப்பிடவும்.
3. பரிசுகளை, முதல் சனி உபவாச ஜெபத்தன்று பெற்றுக் கொள்ளலாம் அல்லது திருத்தல அங்காடியில் பெற்றுக் கொள்ளலாம்.
4. உங்களுடைய ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றது.